www.Padasalai.Net www.CBSEtips.in

R

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள் : 100

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15×1=15

1) தமிழ்விடுதூது ______ என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது

அ) புதுக்கவிதை ஆ) தொடர்நிலைச் செய்யுள்

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசமரம் இ) வளம் ஈ) பெரிய

3) காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பது தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை

இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

4) இந்திரவிழா நடைபெறுவதாக கூறப்படுகிற நகர் ______

அ) புகார் ஆ) மதுரை இ) திருச்சி ஈ) கொற்கை

5) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) தொகைச் சொற்கள் ஈ) உரிச்சொற்கள்

6) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

7) ______ என்ற எண்ணுப்பெயரில் வல்லினம் மிகும்.

அ) இரண்டு ஆ) நான்கு இ) ஆறு ஈ) எட்டு

8) தமிழக அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித்தேர்வு

இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகை தேர்வு ஈ) மூன்றும் சரி

9) வாவி என்பதன் பொருள்

அ) வண்டு ஆ) தேன் இ) பொய்கை ஈ) குற்றம்

10) திமிலுடன் கூடிய காளை ஓவியம் காணப்படும் இடம்

அ) கரிக்கையூர் ஆ) மேட்டுப்பட்டி இ) சித்திரக்கல்புடவு ஈ) கோத்தகிரி

11) Epigraphy என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

அ) அகழாய்வு ஆ) கல்வெட்டியல் இ) நடுகல் ஈ) கிறப்பங்கள்

பாடலை படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

"நாளிகே ரஞ்சே ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்"

CS CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
அ) மணிமேகலை ஆ) பெரியபுராணம் இ) புறநானூறு ஈ) உயிர்வகை

13) இப்பாடலின் ஆசிரியர் ..........
அ) தொல்காப்பியர் ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) குடபுலவியனார் ஈ) சேக்கிழார்

14) நாளிகேரம் - என்பதன் பொருள்
அ) நாரத்தை ஆ) நாகமரம் இ) தென்னை ஈ) அரசமரம்

15) இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகை
அ) வஞ்சி, காஞ்சி ஆ) கோங்கும், எங்கும்
இ) நறுமலர், நரந்தம் ஈ) நரந்தம், குரவம்

பகுதி -II (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4×2=8
(வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

16) விடைக்கேற்ற வினா அமைக்க
அ) இந்தியாவில் 1300க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகிறது?
ஆ) வினைச்சொற்களை அதன் அமைப்பின் அடிப்படையில தனிவினை, கூட்டுவினை என இருவகைப்படுத்தலாம்?

17) கண்ணி என்பதன் விளக்கம் தருக.

18) உனக்குத் தெரிந்த நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

19) செயற்கைகோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியைப் பற்றி திரு.சிவன் கூறுவது யாது?

20) நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

21) 'மிகுதியான்........' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22) தொடர்களை மாற்றி உருவாக்குக.
அ) இளஞ்செழியன் விளையாட்டுத் திடலில் நன்றாக ஓடினான்.
(பிறவினை தொடராக மாற்றுக)
ஆ) இசையின்றி அமையாது பாடல் - (உடன்பாட்டுத் தொடராக மாற்றுக)

23) பகுபத உறுப்பிலக்கணம் காண்க:- விரித்த

24) மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) மேடும் பள்ளமும் ஆ) முதலும் முடிவும்

25) கலைச்சொல் தருக. அ) Hero Stone ஆ) Download

26) பிழை நீக்கி எழுதுக.
அ) ராணி தன்னுடைய பணியை விட்டு விலகினாள்.
ஆ) சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பாள்.

27) பொருள் எழுதி தொடர் அமைக்க:- அ) பரவை, பறவை

CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



28) அகராதியில் காண்க. (பொருள் தருக):- அ) இசைவு ஆ) புரிசை

பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2×3=6

29) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

30) "புதுக்கோலம் புனைந்து தமிழை வளர்ப்பாய்" - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக?

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும் போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன் ஏர் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுப்படுகையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த, சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

1) மிடுக்கான தோற்றத்திற்கும், ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?

2) பிறமாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?

3) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

(வினா எண். 34க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) 2×3=6

32) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

33) வேளாண் கருத்தியலின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

34) அ) கல்லும் மலையும்.......... எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடலை எழுதுக. (அல்லது)

ஆ) ஒன்றறி வதுவே ....... என்று உயிர்வகை பாடலை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2×3=6

35) வல்லினம் மிகா இடங்களில் எவையேனும் மூன்றனுக்கு எடுத்துக்காட்டுடன் விளக்கம் எழுதுக?

36) வா, இரு, போ - வினையடியின் முதல்வினை, துணைவினைகளை எழுதுக.

37) உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விவரி?

CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 5×5=25

38) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக? (அல்லது)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக?

39) அ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் தெருவிலுள்ள பழுதுபட்ட மின்விளக்குகளை சரிசெய்து தரும்படி மின்வாரிய அலுவலருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) மொழிபெயர்க்க:-

1) Linguistics - 2) Polyglot - 3) Phonetics -
4) Phonologist - 5) Literature -

42) நீ உன்னுடைய பொறுப்புகளாக எவற்றைக் கருதுகிறாய் என்பதை ஐந்து தொடர்களில் எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- 3×8=24

43) அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணைய வழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரி?

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. (அல்லது)

ஆ) இந்திய விண்வெளித் துறையில் இவர்கள் என நீங்கள் விரும்பும் இருவர் பற்றிய செய்திகளை விவரிக்க?

45) அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டி தொகுப்புரை ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) 'நீரின்றி அமையாது உலகு' என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

*******

www.Padasalai.Net

CS CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com